# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2149/20 - 2019 නොවැම්බර් මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.11.14

*2149/20 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 3/2012* (xiii).

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்**

*2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (3) ஆம், (6) ஆம் மற்றும் (7) ஆம் உட்பிரிவுகள் மற்றும் 50 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 69 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் மதியுரையின் மீது சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஜோன் அந்தோனி இமானுவெல் அமரதுங்க,
சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும்
கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறை (ஆயுர்வேத ஹோட்டல்களைப் பதிவுசெய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளெவரும் (இதனகத்துப் பின்னர் “அதிகார சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகார சபையில் அத்தகைய தொழில் முயற்சியைப் பதிவுசெய்து, அதிகார சபையிடமிருந்து அத்தகைய சேவைக்கான உரிமம் ஒன்றைப் பெற்றிருந்தாலன்றி, ஆயுர்வேத ஹோட்டல் தொழிலொன்றைக் கொண்டு நடாத்துதல் ஆகாது.

1A - G 31457 — 27 (2019/11)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிய 1963/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறை (சுற்றுலாப் பயணிகள் ஹோட்டல்களின் வகுப்பாக்கம்) ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள், ஆயுர்வேத ஹோட்டல்கள் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

பாகம் I

**ஆயுர்வேத ஹோட்டல்களைப் பதிவு செய்தல்**

4. பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சியொன்றாக, ஆயுர்வேத ஹோட்டல் ஒன்றைப் பதிவுசெய்வதற்கு விரும்புகின்ற ஆள் ஒவ்வொருவரும் -

(அ) (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, அவரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவம் ஒன்றில் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதிய 2071/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான, கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய கட்டணம் இணைக்கப்படுதல் வேண்டும்.

5. பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய விண்ணப்பம் பற்றி முடிவு செய்யும் நோக்கத்திற்கு அவசியமாக இருக்கக்கூடியதென அவர் கருதக்கூடியதான ஏதேனும் தெளிவுபடுத்தல் உட்பட கொடுத்துதவப்பட வேண்டிய மேலதிக தகவல் அல்லது ஆவணங்களைக் கோரலாம்.

6. பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது பிழையான தகவல் அல்லது விபரங்களைக் கொண்டதென கண்டுபிடிக்கப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

7. பணிப்பாளர் தலைமையதிபதியானவர் அதனில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை விண்ணப்பதாரி கொண்டுள்ளாரென திருப்திப்படுகின்றவிடத்து, அவர் அத்தகைய ஆயுர்வேத ஹோட்டலில் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளராக அத்தகைய விண்ணப்பதாரியைப் பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட உரிமையாளருக்குப் பதிவுச்சான்றிதழ் ஒன்றையும் வழங்குதல் வேண்டும்.

8. அத்தகைய ஆயுர்வேத ஹோட்டலைப் பதிவுசெய்வதன் மேல், அதிகார சபையானது, அத்தகைய தொழில் முயற்சியின் ஆகக்குறைந்த நியமங்களைக் கொண்டுள்ள நியமங்கள் சான்றிதழொன்றை அத்தகைய ஆயுர்வேத சுற்றுலாப் பயணிகள் ஹோட்டலின் உரிமையாளருக்கு வழங்கலாம்.

பாகம் II

**பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத ஹோட்டல்களுக்கு உரிமமளித்தல்**

9. (1) இவ்வொழுங்குவிதிகளின் கீழ், பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத சுற்றலாப் பயணிகள் ஹோட்டல் தொழிலொன்றைக் கொண்டு நடாத்துவதற்கு விரும்பும் ஆள் ஒவ்வொருவரும் -

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவம் ஒன்றில் அவருக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 2018 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதிய 2071/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய கட்டணம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(2) முதலாம் பந்தியின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும், ஆயுர்வேத ஹோட்டலின் இயலளவையும் கொள்ளளவையும் தருகின்றதான விரிவானதொரு அறிக்கையை இணைத்திருத்தல் வேண்டும்.

10. பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத ஹோட்டலின் உரிமையாளரிடமிருந்து உரிமம் ஒன்றின் வழங்குகைக்காக விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொண்டதன் மேல், பணிப்பாளர் தலைமையதிபதியானவர் உரிமத்தின் வழங்குகைக்கு குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் விண்ணப்பம் தொடர்பான அத்தகைய மேலதிகத் தகவல், ஆவணங்கள் அல்லது தெளிவுபடுத்தல்களைக் கொடுத்துதவுவதற்கு விண்ணப்பதாரியைப் பணிக்கலாம்.

11. (அ) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆயுர்வேத ஹோட்டலுக்கான, நியமங்கள் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த நியமங்களை விண்ணப்பதாரி கொண்டுள்ளாரெனத் திருப்திப்படுவதன் மேல், ஆயுர்வேத ஹோட்டலின் உரிமையாளருக்கு உரிமம் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி ஒரு மாத காலப்பகுதி ஒன்றினுள் எழுத்தில் அவரது முடிபை விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் உரிமம் வழங்குவதற்கு மறுக்கும் பட்சத்தில், அவர் அதற்கான காரணங்களைக் குறிப்பிடுதலும் வேண்டும்.

12. இவ்வொழுங்குவிதிகளின் 11 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்படும் உரிமம் -

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்குத் தோதானதெனக் கருதக்கூடியவாறான, உரிமத்தில் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாக இருக்கலாம் ;

(ஆ) அதற்கான குறித்துரைக்கப்பட்ட திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் ; அத்துடன்

(இ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் முன்னரே இரத்துச் செய்யப்பட்டு அல்லது இல்லாதொழிக்கப்பட்டிருந்தாலன்றி, உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி ஒன்றிற்கு வலுவில் இருத்தல் வேண்டும்.

பாகம் III

**பொது**

13. விண்ணப்பதாரி -

(அ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஆயுர்வேத ஹோட்டலின் சுற்றுலாப் பயணிகள் தொழில் முயற்சியை, அல்லது பதிவுசெய்யப்பட்ட உரிமையாளராகத் தன்னைப் பதிவுசெய்வதற்குத் தவறியுள்ளவிடத்து ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட நியமங்கள் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த நியமங்களுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்து

பணிப்பாளர் தலைமையதிபதி 11 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் உரிமமொன்றை வழங்குவதற்கு மறுக்கலாம்.

14. பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகார சபையின் அங்கீகாரத்தின் மேல், பதிவுச் சான்றிதழுடன் அல்லது உரிமத்துடன் இணைக்கப்பட்ட ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையைத் திருத்தலாம் திரிபுபடுத்தலாம் அல்லது ஒழிக்கலாம்.

15. பணிப்பாளர் தலைமையதிபதி பின்வரும் ஏதுக்களின் மீது இவ்வொழுங்குவிதிகளின் 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழை அல்லது 11 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை இரத்துச் செய்யலாம் :-

(அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு மீறப்பட்டிருத்தல் ;

(ஆ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள் மீறப்பட்டிருத்தல் ; அல்லது

(இ) ஏழாம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழுடன் அல்லது 11 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்துடன் இணைக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனை இணங்கியொழுகப்படாதிருத்தல்.

16. இவ்வொழுங்குவிதிகளின் 11 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று -

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீமானிக்கப்படக்கூடியவாறான படிவமொன்றில் அவருக்கு அது சார்பில் ஆக்கப்படும் விண்ணப்பமொன்றின் மீது ;

(ஆ) உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் ; அத்துடன்

(இ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 2018 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதிய 2071/57 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையின் நியதிகளின்படி செலுத்தப்படற்பாலதாக இருக்கின்றதான அத்தகைய கட்டணங்களுடன் சேர்த்தனுப்பப்படின்

புதிப்பிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

17. பதிவுச்சான்றிதழை வழங்குவதற்கு மறுக்கின்ற அல்லது வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் புதுப்பித்தல் ஒன்றினை அல்லது இரத்துச் செய்தல் ஒன்றினை மறுக்கின்ற முடிபொன்றினால் இன்னலுற்ற எவரேனும் ஆள், விடயத்திற்கேற்ப, மறுத்தலினை அல்லது இரத்துச் செய்தலினை அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான தொடர்பாடலைப் பெற்றுக்கொண்ட திகதியின் ஒரு மாதத்தினுள் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நியாய சபைக்கு விண்ணப்பமொன்றைச் சமாப்பிக்கலாம்.

18. பதிவுசெய்யப்பட்ட மற்றும் உரிமம்பெற்ற உரிமையாளர் ஒவ்வொருவரும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு ஆகக்குறைந்த தேவைப்பாடுகளுடன், பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத ஹோட்டல் இணங்கியொழுகின்றதென உறுதிப்படுத்துதல் வேண்டும்.

19. பணிப்பாளர் தலைமையதிபதி, சுற்றுலாப் பயணிகள் சுகாதார ஹோட்டல்களின் இடாப்பு ஒன்றைப் பேணுவதற்குச் செய்வித்தல் வேண்டும். அந்த இடாப்பு, பதிவுசெய்யப்பட்ட மற்றும் உரிமம் பெற்ற ஆயுர்வேத ஹோட்டல்களின் அத்தகைய விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பேணப்படுதலும் வேண்டும்.

20. இவ்வொழுங்கு விதிகளில் -

“ஆயுர்வேத ஹோட்டல்” என்பது, விருந்தினர்களின் உள, உடல் மற்றும் ஆன்மீக நல்வாழ்வை மேம்படுத்துவதற்கென சுதேச அல்லது பாரம்பரிய ஆயுர்வேத சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்புச் செய்திருக்கம் ஒரு தொழில் முயற்சி எனப் பொருள்படும்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 18)

1.0 **ஆயுர்வேத சுகாதாரப் பராமரிப்பு ஹோட்டல் ஒன்றுக்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள் :**

1.1 ***அமைவிடம்.***- 2016, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிய 1968/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறை (சுற்றுலாப் பயணி ஹோட்டல்களின் வகுப்பாக்கம்) ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகப்பட வேண்டிய, குறித்த வகுப்பாக்கம் செய்யப்பட்ட ஹோட்டலின் ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்.

1.2 ***கட்டிடங்கள்.***- கட்டிடங்களானவை, ஆயுர்வேத சுகாதாரக் கவனிப்புச் சேவைகளை வழங்குவதற்கென பொருத்தமாக வடிவமைக்கப்பட்டு நிருமாணிக்கப்படுதல் வேண்டும்.

1.3 ***சுற்றுப்புறம் மற்றும் தோட்டம்.***- சுற்றுப்புறமும் தோட்டமும் விரும்பத்தக்கவாறு ஆயுர்வேத மூலிகைகளுடன் வளர்க்கப்பட்டு, ஆயுர்வேத சுகாதாரக் கவனிப்புச் சேவைகளின் தேவைப்பாடுகளுடன் பொருந்தும் வகையில் நன்கு இடப்பட்டு பேணப்படுவதாக இருத்தல் வேண்டும்.

1.4 ***தரிப்பிடம்.***- ஆயுர்வேத சுகாதாரக் கவனிப்புப் பகுதியின் விருந்தினர்களுக்காக ஒதுக்கப்பட்ட தரிப்பிடமொன்று இருத்தல் வேண்டும்.

1.5 ***வரவேற்பு/தகவல்.***- விருந்தினர்களுக்கு ஆயுர்வேத சுகாதாரக் கவனிப்புச் சேவை பற்றிய விபரமான தகவல்களை வழங்குவதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் என தனிவேறான வரவேற்பு/தகவல் மேசையொன்று கிடைக்கக்கூடியதாக செய்யப்படுதல் வேண்டும்.

*1.6* ***ஆலோசனை அறைகள் மற்றும் விருந்தினர் காத்திருக்கும் அறைகள் :***

*1.6.1* வைத்தியருக்காகப் போதுமானளவு இடவசதி மற்றும் வசதிகளுடன் கூடிய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆலோசனை அறை/அறைகள் இருத்தல் வேண்டும்.

*1.6.2* இவ் அறைகள் பிரிக்கப்பட்டு, போதுமானளவு ஒளியூட்டப்பட்டு அத்துடன் காற்றோட்ட வசதியுள்ளவையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த முறையில் பேணப்படுதல் வேண்டும்.

*1.6.3* வைத்தியர்களுக்கும் அதேபோன்று சிகிச்சைகளை நாடிவரும் விருந்தினர்களுக்கும் என சௌகரியமான ஆசன வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

*1.6.4* சிறப்புத் தேர்ச்சி சுட்டிக்காட்டப்பட்டு, ஆயுர்வேத திணைக்களத்தினால்/ ஆயுர்வேத மருத்துவப் பேரவையினால் வழங்கப்பட்ட, ஆயுர்வேத மருத்துவத் தொழிலரின் சான்றிதழின் பிரதியொன்று விருந்தினர் காத்திருக்கும் இடத்தில் அல்லது ஆலோசனை அறையில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

*1.7* ***ஆயுர்வேத சிகிச்சை முறை வகைகள்.*** - ஆயுர்வேத சுகாதாரக் கவனிப்பு அலகானது, பின்வரும் ஆயுர்வேத சிகிச்சை முறை வகைகளை வழங்குதல் வேண்டும் :-

*1.7.1* பூர்வ கர்மா (சினேஹா மற்றும் சுவேதா கர்மா) அதாவது - (அ) தைல அபியங்க மற்றும் சீரா அபியங்க, (ஆ) சிரோதரா, (இ) சர்வங்கதரா, (ஈ) பின்த மற்றும் வாஸ்பா சுவேதா, (உ) அங்னி மற்றும் நிரங்க சுவேதா.

*1.7.2* பிரதான கர்மா (பஞ்ச கர்மா) அதாவது - (அ) வமண கர்மா, (ஆ) விரேதன கர்மா, (இ) நஸ்ய கர்மா, (ஈ) வஸ்தி கர்மா, (உ) ரக்த மொக்சன கர்மா.

*1.7.3* பஸ்ச்சத் கர்மா, (அ) பட்ய ஆஹார விஹரண.

*1.7.4* சுத்ர கர்மா அதாவது - (அ) கன்டுஷா, (ஆ) கவலங்றஹா மற்றும் (இ) அக்ஷி தர்பான.

*1.7.5* ஷமன கர்ம அதாவது - (அ) தீபனா, (ஆ) பாச்சனா, (இ) அதாப மற்றும் (ஈ) செவன.

*1.8* ***சிகிச்சை அறைகள் :***

*1.8.1* சிகிச்சை அறைகள் பொது இடங்களில் இருந்து அப்பால் அமைக்கப்படல் வேண்டும் என்பதுடன், அறையிலும் அதனைச் சுற்றியும் போதுமானளவு அந்தரங்கத் தன்மை இருத்தல் வேண்டும்.

*1.8.2* அறைகளினதும் பின்வரும் நோய் நீக்கற் சிகிச்சைகளை நாடுகின்ற விருந்தினர்களினதும் எண்ணிக்கை தொடர்பில் போதுமானளவு எண்ணிக்கையிலான சிகிச்சை அறைகள் வழங்கப்படுதல் வேண்டும் ; அதாவது - (அ) மேனி உருவுகை, (ஆ) நீராவிக் குளியல், (இ) வேறு சிகிச்சை, (ஈ) மூலிகைக் குளியல், (உ) அக்குப்பஞ்சர் (வழங்கப்பட்டிருந்தால்) தியானம் மற்றும் யோகாசனம் மற்றும் உளவளத்துணை.

*1.8.3* ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனிவேறான சிகிச்சை அறைகள் இருத்தல் வேண்டும்.

*1.8.4* பின்வரும் வசதிகளும் சாதனங்களும் சிகிச்சை நோக்கங்களுக்காக கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும். அதாவது - (அ) பரீட்சிப்புக் கட்டில்/கட்டில்கள், (ஆ) மேனி உருவுகைக்கு/சிரோத்தராவுக்காக மரக்கட்டில்கள் அத்துடன் (இ) நீராவியிடுதலுக்காக மரத்தினால் (வேப்பமரம் விரும்பத்தக்கது) செய்யப்பட்ட பேழை.

*1.8.5* சிகிச்சை அறைகள் போதுமானளவு ஒளியையும் காற்றோட்டத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*1.8.6* போதியளவு எண்ணிக்கையிலான தூம்புதாரைகள்.

*1.8.7* சகல விருந்தினர்களுக்கும் தூய்மையானதும் கிருமி நீக்கப்பட்டதுமான பருத்தியிலான நாரிழைத்துணி வழங்கப்படுதல் வேண்டும் ; அது - குளியலுக்கான மேலங்கிகள், குளியலுக்கான துவாய்கள், முகம் துடைக்கும் துவாய்கள், கைதுடைக்கும் துவாய்கள், படுக்கை விரிப்புக்கள், மூச்சிழுக்கும் விரிப்புக்கள், கழுத்துக்குட்டை மற்றும் விழிக்கவசம் என்பவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

*1.9* ***சிகிச்சைக்குப் பின்னரான தளர்நிலை ஓய்விடம்/பிரதேசம் :***

1.9.1 சிகிச்சைக்குப் பின்னரான தளர்நிலைக்காக, சிகிச்சைக்குப் பின்னரான தளர்நிலை அடைவதற்கெனத் தனிவேறான ஓய்விடமொன்று இருத்தல் வேண்டும்.

1.9.2 அவ்விடமானது, தளர்நிலை அடைவதற்கான கதிரைகளுடன் அமைக்கப்பட்டும், நல்ல முறையில் வேண்டியவற்றைக் கொண்டமைந்தும் அத்துடன் ஏதேனும் இடைஞ்சல்கள் இல்லாமலும் இருத்தல் வேண்டும்.

*1.10* ***மருந்தகம்/மருத்துவப்பொருள் தயாரிக்கும் அறை :***

1.10.1 ஆயுர்வேத பொருட்களை வைத்திருப்பதற்காகவும் மருந்துகளைத் தயாரிப்பதற்காகவும் விசாலமான மருந்தகம் ஒன்று இருத்தல் வேண்டும்.

1.10.2 மருந்து தயாரிப்பானது, ஆயுர்வேத மருத்துவப் பேரவையில் பதிவுசெய்யப்பட்ட தகைமை வாய்ந்த ஆயுர்வேத வைத்தியரொருவரின் அல்லது தகைமை வாய்ந்த மருந்தாளரொருவரின் மேற்பார்வையின் கீழ் செய்யப்படுதல் வேண்டும்.

1.10.3 பொருத்தமான இறாக்கைகள் மற்றும் சேமித்து வைக்கும் சாதனங்கள் மருந்துப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்காக வழங்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் மேசைகள், உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் மருந்து கலக்குவதற்கும் தயாரிப்பதற்குமென வழங்கப்படுதல் வேண்டும்.

1.10.4 மருந்தகமானது, தொடர்ச்சியாகக் கிடைக்கும் வெந்நீர் மற்றும் குளிர்நீருடனான கழிவுத்தொட்டி ஒன்று பொருத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

1.10.5 எல்லா ஔடதங்களும்/மருந்துகளும் அனுமதிக்கப்பட்ட பாத்திரங்களைப் பயன்படுத்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

1.10.6 உற்பத்தி செய்யப்பட்ட ஔடதங்களும் மூலப்பொருட்களும் தனிவேறாகக் களஞ்சியப்படுத்துதல் வேண்டும்.

1.10.7 முறையானதும் போதுமானளவிலானதுமான வெப்பமூட்டல் மற்றும் நொதிக்கச் செய்தல் முறைமைகள் அவதானிக்கப்படுதல் வேண்டும்.

1.10.8 மருந்தாளரானவர் உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி, பயன்படுத்தப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் மற்றும் உற்பத்தியாளர்களினதும் வழங்குனர்களினதும் விபரங்களைச் சுட்டிக்காட்டுகின்ற எல்லா மருந்து வகைகளினதும் பொருள் விபரப்பட்டியலொன்றைப் பேணி வருதல் வேண்டும்.

1.10.9 ஆயுர்வேத சுகாதாரக் கவனிப்பு அலகானது, ஆயுர்வேதத் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரிடமிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளைக் கொள்வனவு செய்தல் வேண்டும் என்பதுடன், இயைபான நியமங்கள் சான்றுப்படுத்தல்களுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

*1.11* ***மூலிகை மருந்து தயாரிக்கும் அறை :***

1.11.1 தேவைப்படும் திண்ம அல்லது திரவ மூலிகை உற்பத்திப் பொருட்கள், கசாயங்கள், பசைக் குழம்புகள் மற்றும் கட்டுக்கள் போன்றவற்றின் தயாரிப்புக்காக, போதுமானளவு அறிவும் அனுபவமும் கொண்ட பணியாட்டொகுதியினருடன், மூலிகை மருந்து தயாரிக்கும் அறையொன்று இருத்தல் வேண்டும்.

1.11.2 சுகாதாரக் கவனிப்பு அலகில் எல்லா ஆயுர்வேத மருந்துகளையும் தயாரிப்பதற்காக பயன்படும் பாத்திரங்கள் ஆயுர்வேதத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*1.12* ***சாதாரண மலசலகூட அலகுகள் :***

1.12.1 ஆண்களுக்கும் பெண்களுக்கும் எனத் தனித்தனியான சாதாரண மலசலகூட அலகுகள் இருத்தல் வேண்டும்.

1.12.2 தேவையானவிடத்து, தனித்தனி ஆடை மாற்றும் அறை இருத்தல் வேண்டும்.

1.12.3 ஒவ்வொரு மலசலகூட அலகும், கழிப்பிட அலகுகள், கழுவு தொட்டிகள், கண்ணாடிகள், துவாய் சட்டகங்கள், ஆடை கொழுவும் கொக்கிகள், தூய்மையான துவாய்கள், காகிதப் பைகளுடன் சுகாதாரக் கழிவுகளையிடும் தொட்டிகள், சவர்க்காரம், சவர்க்காரத் தட்டங்கள், கைப்பிடிகளுடனான மலசலகூடக் காகிதங்கள், உள்ளூறுப்புக்களைக் கழுவும் தொட்டிகள் அல்லது கைகள் மூலம் உள்ளூறுப்புகளைக் கழுவும் தொட்டிகள் அத்துடன் வெந்நீர் மற்றும் குளிர்நீர் என்பவற்றை வழங்குதல் வேண்டும்.

1.12.4 சாதாரண மலசலகூட அலகுகளிலுள்ள பொருத்துக்களும் இணைப்புக்களும் நல்ல தொழிற்படு நிலையில் இருத்தல் வேண்டும்.

1.12.5 போதுமானளவு தனியான தூம்புத்தாரைகள் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

1.12.6 மலசலகூட அலகுகள் போதுமானளவு ஒயியூட்டப்பட்டும் காற்றோட்டத்துடனும் அத்துடன் நல்ல முறையில் பேணப்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.

1.12.7 மலசலகூடத்தின் தரைகளும் 1.5 மீற்றர் வரையான சுவர்களும் நீர்புக முடியா பொருட்களைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

1.13 ***பணியாட்டொகுதியினரும் வசதிகளும் :***

1.13.1 விரும்பத்தக்கவாறாக ஆயுர்வேதத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் ஒன்றிலிருந்து பட்டம் ஒன்றை அல்லது திப்புளோமா ஒன்றைக் கொண்டுள்ள உதவி வைத்தியர் ஒருவருடன், குறைந்தபட்சம் ஆயுர்வேத சுகாதாரக் கவனிப்பு அலகைச் சேர்ந்த மருத்துவ ஆலோசகர் ஒருவராக ஆயுர்வேதத் திணைக்களத்தினால்/ ஆயுர்வேத மருத்துவப் பேரவையினால் சான்றுப்படுத்தப்பட்ட ஓர் ஆயுர்வேத வைத்தியராவது இருத்தல் வேண்டும். எவரேனும் பாரம்பரிய அல்லது உள்நாட்டு ஆயுர்வேத வைத்தியர் அவரது எண்பிக்கப்பட்ட பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு, ஆயுர்வேதத் திணைக்களத்திடமிருந்து விடுவிப்புச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.13.2 ஆண் மற்றும் பெண் என இருபாலாருமாக, ஆயுர்வேத சிகிச்சை முறைகளில் குறைந்தபட்சம் ஆறுமாத கால பயிற்சியுடனான, போதுமான அளவு எண்ணிக்கையிலான பிணிநீக்குநர்கள் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர்களின் பயிற்சிச் சான்றிதழானது ஆயுர்வேதத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

1.13.3 முறையே ஆண் மற்றும் பெண் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக, ஆயுர்வேதம் பற்றி குறைந்தபட்சம் ஆறுமாத காலப் பயிற்சி அத்துடன்/அல்லது செயல்முறை அனுபவமுள்ள ஆண் மற்றும் பெண் கவனிப்பாளர்கள் இருசாராரும் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

1.13.4 வைத்தியர் அல்லது குறைந்தபட்சம் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் ஆங்கில மொழியில் அல்லது வேறு ஏதேனும் இயைபான வெளிநாட்டு மொழியில் ஆற்றல் கொண்டிருத்தல் வேண்டும்.

1.13.5 தொழிற்படு நிலையிலுள்ள கழிப்பிட அலகுடன் தனியானதும் தூய்மையானதுமான மலசலகூடங்கள் பணியாட் தொகுதியினரின் உபயோகத்துக்கென கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

1.13.6 தனிவேறான பணியாட்டொகுதியினர் உடை மாற்றும் அறைகள், ஆண்கள் மற்றும் பெண்களுக்காக அவசியமான தளபாடங்கள் மற்றும் தட்டுமுட்டுப் பொருட்களுடன் வேண்டியவற்றைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

1.13.7 பணியாட்டொகுதியினர் இரவு முழுவதும் தங்குவதாக இருப்பின், போதுமானளவு தங்குமிடம் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

1.13.8 ஆயுர்வேத சேவை வழங்குதலுக்குத் தோதான சீருடைகள் பணியாட்டொகுதியினருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

1.13.9 பணியாட் தொகுதியினர் உணவு உட்கொள்ளும் அறையொன்று தோதாக அமைக்கப்பட்டு வேண்டியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*1.14* ***பொது :***

*1.14.1* அவசியமாயின் மற்றும் அவசியமான போது, முதலுதவி மற்றும் மருத்துவமனைக்கு இடமாற்றல் போன்ற அவசர மருத்துவ வசதிகள்/ஏற்பாடுகள் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

*1.14.2* விதித்துரைக்கப்பட்ட மருந்துகள், அம்மருந்துகள் யாரால் விதித்துரைக்கப்பட்டன மற்றும் வழங்கப்பட்ட சிகிச்சைகள் என்பவற்றை உள்ளடக்கிய, விருந்தினர்களின் அறிக்கைகள்/மருத்துவ விபரக் குறிப்புக்கள்/நோயாளர் வரலாறு பேணப்படுதல் வேண்டும் என்பதுடன் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டதன் மேல் காண்பிக்க இயலுமானதாக இருத்தல் வேண்டும்.

*1.14.3* ஹோட்டல் ஆயுர்வேத திணைக்களத்திடமிருந்து சான்றிதழ் பெறப்படுதல் வேண்டும்.

*1.14.4* ஆகக்குறைந்தது ஐந்து மில்லியன் ரூபாவைக் கொண்ட பகிரங்கப் பொறுப்புடன் காப்புறுதிக் காப்பீடு பெறப்படுதல் வேண்டும்.

*11-1643*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.